## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 2-10 - கிளரொளி[1]
### (கீழ் நிஷ்கர்ஷித்த புருஷார்த்தத்தைப் பெறும் பொருட்டுத் திருமாலிருஞ்சோலை மலையை ஆச்ரயிக்கும்படி பிறர்க்கு உபதேசித்தல்)

2886 * கிளரொளி இளமை * கெடுவதன் முன்னம் *
வளரொளி மாயோன் * மருவிய கோயில் **
வளரிளம் பொழில் சூழ் * மாலிருஞ்சோலை *
தளர்விலர் ஆகில்[2] * சார்வது சதிரே 1

2887 சதிர் இள மடவார் * தாழ்ச்சியை மதியாது *
அதிர் குரல் சங்கத்து * அழகர் தம் கோயில் **
மதி தவழ் குடுமி * மாலிருஞ்சோலை *
பதியது ஏத்தி * எழுவது பயனே 2

2888 பயனல்ல செய்து * பயன் இல்லை நெஞ்சே! *
புயல் மழை வண்ணர் * புரிந்துறை கோயில் **
மயல் மிகு பொழில் சூழ் * மாலிருஞ்சோலை *
அயல் மலை அடைவது * அது கருமமே 3

2889 கருமவன் பாசம் * கழித்துழன்று உய்யவே *
பெருமலை எடுத்தான் * பீடுறை கோயில் **
வரு மழை தவழும் * மாலிருஞ்சோலை *
திருமலை அதுவே * அடைவது திறமே 4

2890 திறமுடை வலத்தால் * தீவினை பெருக்காது *
அறமுயலாழிப் * படையவன் கோயில் **
மறுவில் வண் சுனை சூழ் * மாலிருஞ்சோலை *
புற மலை சாரப் * போவது கிறியே 5

2891 கிறியென நினைமின் * கீழ்மை செய்யாதே *
உறி அமர் வெண்ணெய் * உண்டவன் கோயில் **
மறியொடு பிணை சேர் * மாலிருஞ்சோலை *
நெறிபட அதுவே * நினைவது நலமே 6

2892 நலமென நினைமின் * நரகழுந்தாதே *
நிலமுனம் இடந்தான் * நீடுறை கோயில் **
மலமறு மதி சேர் * மாலிருஞ்சோலை *
வலமுறை எய்தி * மருவுதல் வலமே 7

---

[1] இது கோவில் திருவாய்மொழி
[2] ஆகி

2893 வலம் செய்து வைகல் * வலங் கழியாதே *
வலம் செய்யும் * ஆய மாயவன் கோயில் **
வலம் செய்யும் வானோர் * மாலிருஞ்சோலை *
வலம் செய்து நாளும் * மருவுதல் வழக்கே 8

2894 வழக்கென நினைமின் * வல்வினை மூழ்காது *
அழக்கொடியட்டான் * அமர் பெருங் கோயில் **
மழக் களிற்றினம் சேர் * மாலிருஞ்சோலை *
தொழுக் கருதுவதே * துணிவது சூதே 9

2895 சூதென்று களவும் * சூதும் செய்யாதே *
வேதமுன் விரித்தான் * விரும்பிய கோயில் **
மாதுறு மயில் சேர் * மாலிருஞ்சோலை *
போதவிழ் மலையே * புகுவது பொருளே 10

2896 * பொருளென்று இவ்வுலகம் * படைத்தவன் புகழ் மேல் *
மருளில் வண் குருகூர் * வண் சடகோபன் **
தெருள் கொள்ளச் சொன்ன * ஓராயிரத்துள் இப்பத்து *
அருளுடையவன் தாள் * அணைவிக்கும் முடித்தே 11

**அடிவரவு:** கிளர் சதிர் பயன் கருமம் திறம் கிறி நலம் வலம் வழக்கு சூது பொருள் முடி